ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபதேவரவார்யபரம தயாகுருவே நம:

# கோயிற்கொம்மி

என்னும்

# ஸ்ரீரங்கக் கொம்மி.

மன்னுக்ஷேத்திரமெனவிளங்கும் மன்னார்கோவில்

ஸ்ரீமாக்

ம. வாசுதேவப்பிள்ளை யவர்களால்

இயற்றியது.

சென்னை:

அமிர்த குணபோதினி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1937

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபதேவரவரார்யபரம தயாகுருவே நம:

# கோயிற்கொம்மி

என்னும்

# ஸ்ரீரங்கக் கொம்மி.


காட்டுமன்னுக்ஷேத்திரமென விளங்கும் காட்டுமன்னார்

கோவில் ப்ரபன்ன வித்துவான்

**ஸ்ரீமாந். ம. வெ. வாசுதேவ ராமாநுஜதாசரால்**

இயற்றியது.



இரண்டாம் பதிப்பு.

பாகவதோத்தமர்களின்

வேண்டுகோளின்படி

இந்நூலாசிரியர் குமாரர்

**ஸ்ரீமாந். M. V. திருவேங்கடசாமி பிள்ளை**

அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 1.

1937.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

# அன்புரை

தேனமர் சோலைத் திருவரங்கத்துள்; மாறன் அருளிய தெள்ளிய தமிழ் மறையின் இனிய ஓசையின் இனிமையைக் கேட்டு, பைய யோகுதுயில் கொள்ளும் பரமன், அடியவர் திறத்து அவாக்கொண்டு, அரவிந்தப் பாவையோடு இரண்டாற்றின் நடுவே திருக்கோயில் கொண்டிருக்கும் மாமணிவண்ணன்பால் செப்பிய "ஸ்ரீரங்கக் கோம்பி"யை அடியேன் நோக்கும்போது, பெரிய கோயிலின் இயற்கைத் தோற்றக் காட்சியும், இறைவன் திருவுருவமும் ஒன்றெனை இயைந்து, அடியவர்கள் திருஉள்ளத்து ஆராவமுதமாய் அழகு மிகுந்து பொலிகின்றது.

சீலத்தாலும், ஞானத்தாலும் மிகுந்த நம் பூர்வ ஆசார்யர்களின் சரித்திரத்தை, இந்நூலில் எளிய நடையிலமைத்து, இவ்வாசிரியர் இயற்றியிருப்பது தமிழ் உலகை மகிழ்விக்கச் செய்யும். நம் நாட்டுச் சிறுமிகளுக்கு இப்பாக்கள் நன்கு பயன்படுவனவாகும்.

இவ்வாசிரியர் நல்ல திருந்திய ஞானமும், முதிர்ந்த வயதான உலகாநுபவமும் ஒருங்கே அமையப் பெற்ற பெரியார். இவர் இன்னும் பலநூல்களியற்றி நம் தாய் மொழிக்குத் தொண்டாற்றுவராக.

**C. V. திருவேங்கடம் பிள்ளை,**

நான்காவது, சென்னை மாகாண யாதவ வாலிப மகா நாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர்,

காஞ்சிபுரம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# சாத்துக் கவிகள்.

சென்னை சிந்தாத்திரிப்பேட்டை. ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரபோத சங்கம் என்னும் ஹிந்து ப்ரீச்சிங் ஸொஸைடியின் உபாக்ர ஸபாதிபதியும், ஸ்ரீ லோகரஞ்சனி பத்திராசிரியருமான

ஸ்ரீமான் சி. கோ. அப்பாவுமுதலியாரவர்க ளியற்றிய

## ஆசிரியப்பா

பூமகள் பொன்மக ணிளையார் பெம்மான்
நாமக ளையகன் ஞானியர் பரவுவான்
வேத நான்கும் பூத மைந்துஞ்
சோதி மூன்றுந் துவளக் கனுறினை
னிக்கு வாகினத்த ரிலங்கைக் கோமான்
பக்கஞ்சூழ் பொனிப் பதின்மர் பழிச்ச
வார் வங்கெகுள வறிஞர் குராங்க
நீர்வள நிலவள நிகழ் சோணாட்டிற்
பெரிய கோயிலெனும் பெயர் புனைஇ
யரிய வரங்க மேய வப்பன்
கீர்த்தியை யாடூஉ கிளத்த மகடூஉச்
கீர்த்தியைப் பேணைச் சிறுமை நிறுவல்
யாவெனை வுஞற்றி யன்பு மீதொளிரச்
சீதமார் செந்தமிழ்த் தேன்மழை பொழிந்து
அம்மெனச் சிறுமிக ளாடிக் குமிக்க
கொம்மி நற்சீராற் குயிற்றித் தருகச்
சுப்பிர மணியச் சுகுண விப்பிரன்
றிப்பிலாச்சிவக் கொழுந்து பிள்ளைக்

கோரிட மன்னர் கோயிலாம் புரி
வீர நாரா யணசதுர் வேத
மங்கல மென்னு மான்மிய க்ஷேத்திரந்
தங்கிய வழகிய மன்னனார் தயைபுரிந்
திகழுமதங் கரிஷிக் கருள் சுரந்த
புகழும் வேத புஷ்கரணி வடபான்
மோது காவிரி முயங்கச் சீமன்
நாதமுனிவர ராள வந்தார் நனி
நண்ணிய வைணவ நிகழ்த்தவ தரித்த
எண்ணின் மகிமையூ ரெழிற்றலம் வாழும்
தீரனும் வாசு தேவ ராமாநுஜன்
வீரமா ரவுணர் விண்ணவர் கடைந்த
அலைகட லெழீஇய வமிழ்தமீ தெனத்
தலைமையாந் தேவர் தாகந் தணிப்ப
பத்தர் குழாங்கள் பாடிப்பரப்ப
வெத்திறக் கவிக்கட லென்ன பாவலர்
வியப்பத் தந்தனன் விசயவல்ல
மியங்கு வேங்கட விரமாநுசனெனுந்
தாசனும் எழுதிலா வெழுத்திற்
பேசொணு வண்ணம் பிரசுரித்தனனே. (1)

---

ஸ்ரீ வீர நாராயண புரமென விளங்கும்
"காட்டு மன்னர் கோயில்"
பிரபன்ன வித்துவான்

## ஸ்ரீமாந் ஸ்ரீநிவாச ராமாநுஜ தாசரவர்களிற்றிய

பன்னிரு சீர்க்கழி னெடிலடியாசிரிய விருத்தம்.

அணி கொளவிரி வேதத்தினுச்சியினடிப்பது
மாகம புராணங்களில்

அன்போடிருப்பது மிதிகாச முதலினு
மருந்தமிழ்ப் பாவுறை வதும்
மணிகொளொளிர் பாற்றிரைக் கடலிற்றுயில்வது
மாநிலத்தோர் கணன்றாய்
மனதொன்றிக் காண்பரிதென வெண்ணியே தனது
மனமகிழ்ந் தினிது காண்க
திணிகொள் பொனின் மணிகளொளி பரவுமதிலேழுடைத்
திருவரங்கத்தி லழகாய்த்
திருக்கண்வளர்ந்திடுந் திருவரங்கற்கு நற்
செயலான கொம்பி யொன்று
பணிகளொளிர் மலர்மார்பன் வேங்கடாசலவேள்
பரிந்து செய் தவத் துதித்த
பகர் வாசுதேவனென பெயர் பெற்றுயர்ந்த
பாவீரன் பணித்தனனரோ. (2)

---

இஃது

புதுவை விலக்ஷணகவி

ஏ. வே. இராமாநுஜ நாவலர் சுவாமிகள்

பிரதம மாணாக்கரு ளொருவராகிய

புவனகிரி ப்ரபன்ன வித்துவான் பரமஹம்ச

## ஸ்ரீமான் அழகிய மணவாள ராமாநுஜ ஏகாங்கி

சுவாமிகளியற்றிய

அறுசீர்க்கழி னெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீரேறு மெய்ஞ்ஞான சிட்டர்தொழு முனிநாதன்
றிகழு மூதூர்,
காரேறு பொழிற் கஞறு மன்னுபுரி யுறை காளக்
களத்தான் போற்றும்

வாரேறு மூலத்திருவின் மகிழ் நன் வளர்குலதிலக
வாசு தேவன்
ஏரேறு திருவரங்கக் கொம்பிதனை யினிதுறவே
யிசைத்தான் மாதோ. (3)

---

இஃது
சென்னை இந்து டிராக்ட்டு ஸொஸைடி
உபந்யாசகர் காவாத்தூர்
பாகவதோத்தமரான ஸ்ரீமான்
## அரங்கசாமி முதலியாரவர்க ளியற்றியது
அறுசீர்க்கழி னெடிலடி ஆசிரிய விருத்தம்.

கொன்றை மலர் புனையரனு நாரதனு மலரயனுங்
கோதி லாத
பொன்றிகழும் பொன்னாட்டுப் புத்தேளிர் குழுவுமவர்
பூவை மாரும்
சென்று தினங் குடிகுடியாட் செய்கின்ற தென்னரங்கன்
சிறந்த கொம்பி
நன்றிமிகு வசுதேவ னற்றமிழின் மழை பெய்து
நவின்றான் மாதோ........... (4)

---

இஃது
திருக்கோவலூர் தாலூகா உளுந்தூர்ப்
பேட்டை ஜோசியரும் அலங்காரக்
கவிஞருமாகிய ஸ்ரீமான்
## கிருஷ்ணசாமி கவிராயரவர்க ளியற்றிய,
அறுசீர்க்கழி னெடிலடி ஆசிரிய விருத்தம்.

பூமலிந்த பூம்பொழில் சூழ்தெவ்விடத்து மணநாறிப்
புகழ் பெற்றோங்கும்

பூமலிந்த வீரநாராயணா நற்புரம் போந்து
புனித ஞானப்
பாமலிந் தவைணவ நற்குலமலிந்து பண்புபெறு
மரங்கக் கொம்பி
பாமலிந்து புகழ்மலிந்தான் பரவாசுதேவனெனும்
பாவல் லோனே. (5)

---

இஃது

பறங்கிப்பேட்டை வித்வ ஸ்ரீமான்

## ஆ. நாராயணசாமி பிள்ளை யவர்களியற்றியது

கட்டளை கலித்துறை

பூவார் திருமகள் பூத்தமைமேனி புலவர்தொழ
மாவார் செழுந்தமிழ் மாமாலை சூடவளரரங்கத்
தேவர யெமையருள்வான் பதம்கொம்பி தெளிதாச்சொல்
நாவார் துதிகவி வாசுதேவன் மிக நல்கினனே.

---

இஃது

இந்நூலாசிரியர் குமாரர்

## M. V. திருவேஙகடசாமி பிள்ளை

யவர்களா லியற்றியது.

நேரிசை யாசிரியப்பா

அருமறை புரந்த மீனும் பெருகொலி
ஆழியமுதருள் வாழியாமையும்.
இருநிலந் திருத்து திருவுர வராகமும்
ஈர்கிண நெடுங்குடர் வார்நர வரியும்

உலகடியளக்க நிலவுநீள் குறளும்
ஊதை சேயேந்து மேதைமாதவனும்
எழுமையுங்களையு மழுவலாளனும்
ஏதிலர் மருவு நீதியிராமனும்
ஐவர் தோணயந்த தையல் துணைவனும்
ஒரு நெறி கடக்குநாள் பெருகருள் பொழிவனும்
ஓங்குநீர் பொன்னி பாங்கிரு புறந்தழீஇ
ஔவிய மகன்ற செவ்வியோர் பரவ
அஃகலில் கருணை வெஃகுருவாக
அரங்கமேவிய வுரங்கெழு சோதி
ஆரணங் கிலங்கு காரணக் கடவுள்
இருண்மலமகற்றுந் தெருண்மலிபதமே
ஈடில் பெருந்துணை கூடுபரிவொடு
உரைதமிழ் வழக்கின் விரைமலி கொம்பி
ஊக்கம் பெருக வாக்கியோ னெந்தை
எழின்மலி வைணவ முழிவழி யுணர்வோன்
ஏத்து முத்தமிழ் மெய்ச் சாத்திர முணர்ந்தோன்
ஐயமில் கேள்வி பொய்தவிருரவோன்
ஒரு முனி நாதன் வருபதியாளன்
ஓகையார் வாசுதேவன்
ஔவையினினிய வார்வத்தோனே. (7)

சுபமஸ்து.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஸ்ரீமதே வரவராய பரமதயா குருவே நம:

# அரங்கமான்மியம்.

---

## முகவுரை.

கடல்புடை சூழ்ந்த வுலகத்திலுள்ள எல்லாத் தேசங்களினுஞ் சிறப்புடைத்தாய சோழ நாட்டிலே, காவிரியென்னுந் தெய்வத்தன்மையுள்ள நதியினால் நீர்வளம் நிலவளம் முதலிய வளங்கள் எக்காலத்திலுங் குறைவுபாடிலதாய்ப் பாதாளலோகத்தையும் பார்க்கக்கூடிய வாழமுள்ள காவிரி நதியையே அகழியா யமையப்பெற்றதும், பூமிதேவிக்கு முக திலகம்போல் விளங்கப்பெற்றதுமாய திருவரங்கத்தின் கண்ணெழுந்தருளிய கருணைக் கடலாகிய "ஸ்ரீ நம்பெருமாளைப்" பூர்வம் பிரமனுவாராதிக்கப்பெற்று அவனருளாற்றாய்மை வாய்ந்தரகு குலோத்தமராகிய இட்சுவாகு சக்கரவர்த்திக்குக் கொடுத்தருளவும் அற்றை நாட்டொடங்கிக் கிரவ நற்குலத்தோரால் ஆராதிக்கப்பெற்று சக்கரவர்த்தி திருமகனால் பாகவதோத்தமராகிய ஸ்ரீ விபீஷணாழ்வான் செய்யாமற் செய்த வுதவிக்கு ஏதுவும் கைமாறுகாதெனக் கருதி யெல்லாம் வல்ல தனிமுதற் கடவுளை சுந்தரவடிவத் தோடெழுந்தருள ஆழ்வான் அளவில் ஆனந்தத்தோடு இருகரங் கூப்பித் தாழ்ந்து தெண்டம் சமர்ப்பித்து எத்தவம் புரிந்தேனோவென வொப்பாரு மிக்காருமிலாத அராவணைச் செல்வனை சிரமேற்றாங்கித் தென்றிசை நோக்கி வருகையில் பண்டை நாட் காவிரிநதியின்றவத் தினுக்கிரங்கியருள் புரிந்தவாறே இருபுரமும் பொன்னிமாலை யென விளங்கிய

இத்திவ்விய க்ஷேத்திரத்தில் திருக்கோயிற் கண்டருளினு னென்று சங்கர பகவானால் நாரதமா முனிக்குபதேசித் தருளப் பெற்றதும், அரனயனாதியராலும் ரிஷிசிரேஷ்டரா லும் முனி சிரேஷ்டர்களாலும் விபீஷணாழ்வான் முதலாய எண்ணில் பாகவதோத்தமர்களாலும் புராணங்களாலும் தோத்தரித்து ஆராதிக்கப் பெற்றதும் நித்தியாம்சம் பொருந் தியவதரித்த "நம் பாரங்குசர்" முதல் பதின்மர்களா லும், பூர்வாசாரியர் "ஸ்ரீமந்நாத முனிகள்" முதல் நம் சமயா சாரியர்களாலும் சமயம் சேர்ந்தொழி யெச்சமயவாதி களும் நாணமடைய வெண்ணிலற்புதங்க ளியற்றப் பெற்ற தும் "திருவாய் மொழியாகிய" அருட்பாவால் தென்மொழி யில் வேதத்துட் பொருளை யுலகிற் சேதனருய்யுமாறு கடா க்ஷிக்கப் பெற்றதும் பொன்னடியாம் ..மாரியர் காலக்ஷேபங் கூறுகையில் அருட்சோதி வடிவாயவெம் "அழகிய மணவா ளன்" உவந்தருளி மகாமந்திரமாகிய "ஸ்ரீசைலேசம்" என் னுந் தனியனை யருளப் பெற்றது மாய வித்தலம் எம்மண் ணல் திருக்கோயிற் கொண்டருளும் திருப்பதிக ளிற்றலையா யதும் "பிரணவாகாரமுள்ள" விமானத்திற் றென்றிசை நோக்கித் தன்னந்தனியனாய் ஸ்ரீயப்பதியாகிய எம் "பர வாசுதேவன்" வீற்றிருந்தருள் புரிதலால் "ஸ்ரீ பூலோக வைகுந்த மெனவும்" மறைகள் கூற நிற்கும்.

இக்கோயின் மான்மியம் ஆதிசேடனும் புகலவரிதென ஆன்றோர் புகன்றுளாராயின் தரும்பினுஞ் சிறியேன் புகல்வ தெங்ஙனமெனில் துரும்பினு மன்று துரும்பிற் பற்றிய தூசியினுஞ் சிறியேனாய அடியேன் பாகவதோத்தமர்களின் பாததூளைப் பற்றுக் கோடாகப் பூண்டொழுகுந் தரத்தின ரின் கோடியிலோர் கூறுடையார் ஏவும் ஏவற் கைங்கரியம் நிறை வேற்றற் பொருட்டேயாம். அன்னார் ஏவலைச் சிர மேற்றாங்கி யொழுகுந் தமியேனை, நண்பர்களும் சில உபாத்தி

மார்களும் பெண் பாடசாலையில் கற்கும் சிறுமியர் எளிய நடையில் வாசிக்கவும் மகா நவமியில் இன்னிசையால் பாடவும் விளையாட்டாகக் கும்மி யடித்தற்கும் பஜனை கூடத்தில் பிரதக்ஷணம் சுற்றி வருவதற்கும் நம் சமயதத்துவங்க ளடங்கியுமுள்ள நூலொன்று இயற்ற வேணுமாய் வினவினர் அவ்விருப்பத்திற்கிணங்கி இயற்றற் கிசைந்தேன் இக் கொம்மி யறிவுடையாரவைக் களத்துப்புகின் யாதாகுமெனின் மணற் சோற்றிற் கல்லாராய்வது போலாகுமாயினும் "அரங்கன் வைபம்" இடையிடையே கூறியுளதால் குற்றம் நீக்கிக் குணத்தைக் கொள்வது ஆய்ந்தோர் கடமையாமென வொருவாறு திடங்கொண்டு வரைவானாயினேன்.

இங்ஙனம்,

"ம. வே. வாசுதேவ ராமாநுஜ தாசன்".

தில்லைத் திருச்சித்திரகூடம். 8—3—36.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# ஸ்ரீரங்கக் கொம்மி.

## காப்பு.

பொன்னிநதி சூழும் பொன்னரங்கர் சேவடிக்கே
யின்னிசையாற் கொம்மியியற்றிடவே—தென்மொழியில்
வேதம்பணித் தவிமலன் சடகோபன்
பாதம்பணிந் தேன் பரிந்து.

## ஸ்ரீமந்நாதமுனிகள் துதி.

ஆதிமுனி சேனும்ச சோதி குருகைபூத்
தாரணத் தமிழாக்கிய
நீதமுனியைக் கண்டு யோகமிகு தாகமாய்
நிகமமார் பாவையுண்டு
வேதமுனி தானுவும் வெட்சி வேணுரதனும்
விரும்பு முனிதேவ கானப்
போதமுனி யாமெங்கணு தமுனி பாதமலர்
போற்றிமிக வேத்திவாழ்வாம்.

கொம்மியடிப் பெண்கள் கொம்மியடி நீவீர்
கோயி லரங்கந் தனில வாழும்
நம்மிடர் தீர்க்கும் ஸ்ரீ நம்பெருமாளை
நாடிக் கொம்மி யடியுங்கடி பதம்
பாடிக் கொம்மியடியுங்கடி.

இம்மானிலந்தனில் தென்னரங் கேசன்மேல்
இன்னிசைக் கொம்பித் தமிழ் பாட
நம்மாழ்வாரின் பொன்னடிக் காப்பென்று
நன்னயக் கொம்மி யடியுங்கடி வெகு
சொன்னயக் கொம்மி யடியுங்கடி. 2

சீரங்கக் கொம்மியைப் பாடுங்கடி—நம்
சீதரன் பாதத்திற் கூடிடுவோம்
பாரெங்கும் போற்றும் பத்தாழ்வார்கள் பாதத்தைப்
பணிந்து கொம்மியடியுங்கடி தலைக்
கணிந்து கொம்மியடியுங்கடி. 3

வித்வ ஜன கோலா கலனெனும் பண்டித
வீரன் தன் நன்னை மூன்று கேள்வியினால்
சித்தங்கலக்கிய ஆளவந்தார் பதம்
சேவித்துக் கொம்மியடியுங்கடி மனம்
பாவித்துக் கொம்மியடியுங்கடி. 4

பதிதனில் பாஷண்ட வேரறுத்து நற்
பரமே யரியென வேயுரைத்த
எதிராஜன்திரு சேவடி காப்பென்று
எத்திக் கொம்மியடியுங்கடி அவரைப்
போத்திக் கொம்மி யடியுங்கடி. 5

குணவாளர் துதிக்குந் தென்னரங் கேசன்மேல்
கொம்மியைச் செந்தமிழாலுரைக்க
மணவாளமாமுனி மாமலர் பாதத்தை
மகிழ்ந்து கொம்மியடியுங்கடி மிகப்
புகழ்ந்து கொம்மி யடியுங்கடி. 6

தூண்டா விளக்கின் சுடர்க்கொடியாமெங்கள்
தென்னரங்கம் வாழ் மடப்பிடியாம்
ஆண்டாளம்மன் திருவடி காப்பென்று

ஆனந்தக் கொம்மியடியுங்கடி பர
மானந்தக் கொம்மியடியுங்கடி. 7

அங்கயற் கண்ணி யரங்கநாயகியின்
தங்கச் சிலம்பணி தாட்பணிந்தே
பங்கய நாபனும் ரெங்கநாயகன் மேல்
பரிந்து கொம்மியடியுங்கடி புகழ்
தெரிந்து கொம்மியடியுங்கடி. 8.

தென்னரங்கமாம் பொன்னரங்கமதைத்
தேர்ந்தால் திருங் கருவரங்கம்
நன்னரங்கமாம் மின்னரங்கத்தை
நாடிக் கொம்மியடியுங்கடி மிகக்
கூடிக் கொம்மியடியுங்கடி. 9

தேவி சரஸ்வதி தாட்பணிந்து நம்
தென்னரங்கக் கொம்மி கூறிடவே
நாவிலே நின்று காருமம்மா நங்கள்
நாயகமே கலைமாமணியே என்
தாயகமே கலை மாமணியே. 10

பாலொடு நீர்போலும் பூவொடு நார்போலும்
பகரொடு நெற் கொள்ளும் வாறது போல்
பால கவி சொன்னேன் பள்ளிகொண்டானுக்கு
பாவலர் பாதத்தில் கொட்டுங்கடி கை
நாவலர் பாதத்தில் தட்டுங்கடி. 11

---

## நூல்

தென்திருக் காவேரி கொள்ளிடமாம்
திருமஞ்சனக் காவிரிக் குள்ளிடத்தே
பொன்றிகழும் பொன்னி சோணுடடி லங்கைப்
பூமன்னன் காணவே பூத்ததடி. 1

பொன்னி நதியிற் புனலாடி நம்
பொன்னரங் கேசனை சேவை செய்ய
மன்னுந் திருமண்ணும் மஞ்சட் பொடியும்
மங்கைய ரெல்லோருந் திட்டிக்கொண்டு. 2

சந்நிதி வீதியில் நன்னயமாய்ச் சென்று
சாமியாம் நேமி தரித்தார்க்கே
முன்னீதி சொன்ன நம்பிள்ளை சந்நிதி
முன்னே தோற்றுது பாருங்கடி. 3

சப்தப் பிரகாரங்கள் கொண்டதடி நம்
சாமி யாழ்வார்களுங் கண்டதடி
சப்த லோகங்கட்கும் சுவாமியானவன்
சட்குண சுந்திர திரனடி. 4

நாலு புரத்திலும் பொன்மதிளாம் அதின்
நடுவிலிருப்பத்தோர் கோபுரமாம்
கோல கோபுர மாமணி மண்டபக்
கோயிலழகையும் பாருங்கடி. 5

கோபுர தரிசனங் காணுங்கடி கொடும்
பாபம் நம்மைக் கண்டு நாணுமடி
தீபுரமாறையுந் தீரவறுத் திட்ட
தீனதயாபரன் கோயிலிலே. 6

ஆணிப் பொன் மாணிக்கக் கோயிலடி காக்கும்
ஆனை முகன் றலை வாயி லடி
காணிக்கைக் கொண்டுமே வாருங்கடி யிந்த
கனகாங்கத்தைப் பாருங்கடி. 7

கருமிகள் கண்ணுக்குக் கற் கோயில் ஞானக்
கண்ணுடை யார்க்கிது பொற் கோயில்
கிருமி கண்ட சோழன் கெர்வ மடக்கிய
கூரத்தாழ்வான் பதங் கூடுங்கடி. 8

நாதனரங்கன் பொற்பாதங் கதியென்று
நாடோறுந் தப்பாமலே துதிக்கும்
வேதங்க ளென்றுளும் கீத வொலி செய்யும்
வேதியர் வீதியைப் பாருங்கடி. 9

உத்திர சித்திர வீதியடி இங்கே
உயர்ந்த மாளிகை சோதியடி
பத்திமைப் பூண்ட பட்டரின் மாளிகை
பாங்குடன் தோற்றுது பாருங்கடி. 10

பாரெங்கும் போற்றும் வியாச பராசர
பட்டர் செந்தாமரை தாள் போற்றி
சீரங்க நாராயண ஜீயர் சந்நிதி
சேவித்து சென்மக் கடல் கடப்போம். 11

ஞான மனுட்டான மோங்கிடுமே திரு
நாராயண னருள் தேங்கிடுமே
ஆன திருமந்தரம் மூன்று மளித்திட்ட
ஆயனார் சேவடிப் போற்றிடுவோம். 12

பரசமய நிரசனஞ் செய்திட
பாங்காய்த் திருச்சின்ன மூதி வரும்
பிரதிவாதி பயங்கர வண்ணன்வாழ்
பெட்புடை மாளிகை மின்னுதடி. 13

பவத்துழன்றிடும் மானிடர்க்கு வேத
பஞ்சசமஸ்கார தீட்சை செய்யும்
தவத்தவன் கோயிலண்ணன் திருவடித்
தாழ்ந்து கொம்மியடியுங்கடி. 14

பத்தரை ரக்ஷிக்க பத்தாவதாரன்றன்
பாஞ்சசன்ய பூஷணுதிகளே
பத்தாழ்வார்களாய்ப் பாரில் விளங்கிய
பாக்கியத்தை யென்ன சொல்வேனடி. 15

அண்டமளாவிடும் மாமதிளாம் ஒரு
ஆயிரங்காலுள்ள மண்டபமாம
தொண்டர்களின் திருச்சந்நிதிகடோறும்
தொகுத்து கொம்மியடியுங்கடி 16

அம்புயனைங்கரன் சங்கரன் போற்றிடும்
ஆதிபிரணவக் கோயிலிலே
கம்பரால் முன்னொரு செம்பொன்மண்டபங்
கட்டியிருக்குது பாருங்கடி. 17

பாண்டியன் கட்டிய பொற்கிழிதன்னைப்
பரமே யரியென வேயறுத்த
ஆண்டவன் கண்டருளன்னையாராம் எம்மை
ஆண்டாள் சந்நிதி பாருங்கடி. 18

நாடுந்திருவாடி பூரத்திலே தெய்வ
நாயகிமங்கள வாரத்திலே
சூடிக்கொடுத்த சுடர்க்கொடிபூமாது
செந்துளசி சேவை தந்தாளடி 19

ஆண்டாளடிமலர்ப் பூண்டிடுவோம் பவக்
காண்டாவனமதைத் தாண்டிடுவோம்
நீண்ட திருப்பாவைதன்னை நிதஞ்சொல்லி
நிமிர்ந்து கொம்மியடியுங்கடி. 20

காமன்கணை தீட்டமாட்டானடி கொடுங்
காலனெதிர்தலைக் காட்டானடி
பூமன் விதித்தலைத் தீட்டானடி திரு
பூவையாண்டாள் திருப்பாவை சொன்னால் 21

கற்பூரவாசங் கமகமென நல்ல
கஸ்தூரி வாடை குமுகுமென
தற்பரனுக்குத் தமிழ்பாவை சொன்ன
தாயார் சேவையைக் கண்டோமடி. 22

மல்லிகை செண்பகம் முல்லை மலர்களும்
மார்பில் பதக்கமுந் தானணிந்து
அல்லிமடந்தையை வில்லிபுத்தூரானை
அப்பனாங்கனைப் பாடுங்கடி. 23

தக்கசமணரை சைவரை புத்தரை
தாழவைத்து விசிஷ்டாத்விதமாம்
முக்கோல்தரித்த முனிராமாநுஜன்
முன்ஜெயித்த ஜெயகம்பங்கண்டே. 24

கம்பத்தைக் கண்டுமே வாருங்கடி வேத
கருடன்சேவையிற் றேருங்கடி
சம்பத்தளித்திடும் துன்பந் தொலைத்திடும்
சாமியின் சேவையென் சொல்வேனடி 25

சாமியுடையவர் சந்நிதியாமிங்கே
சத்காலக்ஷேபஞ்செய் கோஷ்டிகளாம்
பூமியில்வாழுஞ் சராசரமுய்ந்திடப்
பொன்னரங்கம்வளர் புண்ணியனும். 26

தானுகந்ததும் தமருகந்ததும்
தானனத் திருமேனியிங்கே
வானும் வையமும் வாழ்த்தி வணங்கிடும்
வரதராமாநுஜன் சேவையடி. 27

நல்லவரேத்திடும் ராமாநுஜன்புகழ்
நாடுமமுதனார் தாள்போற்றி
சொல்லற்கரியப் பிள்ளைப்பெருமாளருள்
திவ்யகவிப் பொருள்தேருங்கடி. 28

சக்கரத்தாழ்வானைப் பாருங்கடி—இந்த
சந்நிதிக்கேகை கூப்புங்கடி
சக்கரைமுப்பழந் தேங்காயுங்கொண்டு
சார்ந்துவலமாய் வாருங்கடி. 29

சாமிபட்சிராஜன் சேவையடி—சென்ம
சஞ்சலந்தீர்த்திட தேவையடி
பூமியரங்கமமர்ந்த சரிதையைப்
பெண்மணியாம் நீங்கள் கேளுங்கடி. 30

அரங்கத்தம்மானை வேங்கடத்தப்பனை
அத்திமலையானைச் சுந்திரனை
பாங்கெடுத்திட்ட செல்வனை நாற்றெட்டுப்
பதியமர்ந்தோனைப் பாடுங்கடி. 31

தேன்வளர்கொன்றையுமான் மழுவம்புலி
செஞ்சடைக்கார்கள முங்காந்து
மான்விழியஞ்சனுதேவி சுதனை
மன்னன்ராமனுதன்ருள் போற்றி. 32

சந்நதிதோற்றுது முன்னாலே—தண்
சந்திர வாவியும் பின்னாலே
முந்தியாமென நாடிவந்தயாமு
நாரியர் சந்நதிப்பொன்னாலே. 33

பாம்பணைமேலையன் றுயில்புரியதேவர்
பணிந்துபூமழைத்தான் சொரிய
ஓமென்றொலித் திடுங்கண்டாமணியோசை
உள்ளங்கவர்வதென் சொல்வேனடி. 34

செம்பொன்னரங்கன் சந்நதியிற்சென்று
சேர்ந்துவலமாய் வாருங்கடி
பம்புகதிர்வீசும் ரெங்கவிமானம்
பாங்குடன்தோற்றுது பாருங்கடி. 35

சேனைமுதலிகள் சந்நதியாமிங்கே
தேவகணங்கள் கைககூப்பிநிற்பார்
ஆனையைக் காத்தவரங்ககரப்பன்
அம்புய பாதத்தைப்போற்றிடுவோம் 36

கார்முகில்வண்ணனை கஸ்தூரி ரெங்கனை
காலைவிஸ்வரூப தரிசனத்தை
பார்புகழ் செந்தமிழ் பள்ளியுணர்த்திடப்
பாடுமரையர்கள் சேவையடி. 37

ஏகாந்த நித்திரை சந்நதியிலிந்த
எக்காளம்பேரிகை யேதுக்கடி
நாகசுரந்திருச் சின்னம்புள்ளாங்குழல்
நாடும் வீணைகான வோசையடி. 38

பஞ்சவாத்தியம் மூழங்குதடி—திருப்
பல்லாண்டுபாவை வழங்குதடி
கொஞ்சிடுரஞ்சித செந்திருசுந்தரன்
கோஷ்டியழகையும் பாருங்கடி. 39

கோபாலனைப் பெற்றக்கோகுலத்தாரிவர்
கோவாங்கபிலையுடன் பணிவார்
மாபரலான தும்புருநாரதர்
வம்பவிழ்வான வரோதையடி. 40

பத்தியாய்ப்பனிரெண்டு நாமமிட்டுமிக்கப்
பாகவதரெனப் பெயருமிட்டு
தித்திக்கவே திருவாய்மொழி சேவிக்கும்
சீமான்கள் கோஷ்டியைப்பாருங்கடி. 41

பட்டரைவேட்டியரை நாணும் நல்லப்
பட்டிகை மோதிரங்கள் பூண்டு
சிட்டர்பணிந்திடும் பட்டாசாரியர்
சிறந்துநிற்கிறார் போற்றுங்கடி. 42

தோதவத்திதூமறையோர் கனாமிவர்
தென்னரங்கநகர் செல்வர்களாம்
மாதவத்தோர்களாமீரைந்து கொத்துளார்
மன்னுஞ்சிறுதொண்டில் நிற்பாரடி. 48

பிரணவத்தைவலம் வாருங்கடியதைப்
பொருந்து மூச்சிலைப்பாருங்கடி
சரணாகதியென்று தாழுங்கடிரங்க
ராஜன்றன்சேவையிற் றேருங்கடி 44

குடதிசைசேவை திருமுடியாம் ரங்கன்
குணதிசைசேவை திருவடியாம்
வடதிசைசேவையைப் பின்காட்டி ஐயன்
வாழிலங்கைநகர் தான்நோக்கி. 45

கருணைபொழியும் திருமுகமும் நல்லக்
கஸ்தூரிநாமத் திருவழகும்
கிரணமார்சங்காழி வில்லுடன்வாள்கதை
கேசவன்கைகளிற் கண்டோமடி. 46

சோதிசுயம்பொருளானவனை எங்கள்
சுந்திரத்தோளனை யச்சுதனை
மாதவன்றன்னை மணத்தூணைப்பற்றியே
வாயாரபல்லாண்டு பாடுங்கடி. 47

கண்டோம் கண்டோம் கண்டோமகண்டோமடி கரு
மாணிக்கமாமணி கோயிலிலே
கொண்டல்மலைபோலக் கண்டோமடி திருக்
கொண்டல்வண்ணன்பள்ளி கொள்வதைநாம் 48
பேராயிரங்கொண்ட பேரருளாளன்முன்
பிரியமாய்க்கைகளைக் கூப்பிநின்று
சீராயதாமரைவாயையும் தாளையும்
சேவித்துக்கொம்மி யடியுங்கடி. 49
தீராவினைகளைத்தீர்க்குமடி என்றும்
திவ்வியதேசோன்மயஞ் சேர்க்குமடி
நாராயணாஹரிகோவிந்தா வென்றுமே
நடித்துக்கொம்மி யடியுங்கடி. 50

கச்சணிகும்பத்தனங்குலுங்க விரு
கையில்வளையல் மிகத்துலங்க
அச்சுதரபரந்தாமா வரங்காவென்
றானந்தபாஷ்பம் பெருகிடவே. 51

ரங்காரங்காவென்று சொல்லுங்கடி ரங்க
ராஜசபைமுன்னே நில்லுங்கடி
பங்கயனைத்தந்த ரங்கனுஞ்சரப
பங்கத்துங்கசிங்க ராஜனடி 52

சரபசம்ஹார சிங்கனடி யந்த
சாபஞ்சேர்முத்திக் கங்கனடி
கரதலாமலகம்போல் காட்டியும் ரங்கத்தைக்
காணார்க்குமானப் பங்கனடி. 53

எங்கும் நிறைந்தொளிர் சோதியடி எம்மான்
எல்லாஞ்செய்யவல்ல நீதியடி
தங்குந்தனியனுய்நின்றானடி ஐயன்
தன்னடியார்க்கே யெளியனடி. 54

பாற்கடல் துறந்தயோத்திவந்து இந்தப்
பாங்கரனரெங்கத்தி லோங்கிடவே
சேல்விழிபூமாது செங்கமலத்தாயைச்
செம்மலர்பாதத்திற் கண்டோமடி. 55

பூமகன்காணும் பொன்பாதமடி பூத
நாதன்பூசைசெய்த பாதமடி
மாமறைதேடிய பாதமதையிந்த
மதிளரங்கத்திற் கண்டோமடி. 56

மாமணிகற்களாற் கூடத்திலே தெய்வ
மாசுணத்தாலொரு பீடத்திலே
கோமறையுச்சியில்நின்றே நடித்திடும்
கோவிந்தன்சேவையைக் கண்டோமடி. 57

கண்டுகளித்தோமென்றாடுங்கடி கறை
கண்டனும் நாரதனுமயனும்
விண்டுமறையோதிக்கண்டுங் காணொண்ணாத
விண்டமலர்ப்பதங் கண்டோமென்று. 58

ஸ்ரீபாததீர்த்தமுட்கொண்டோமடி ஜென்ம
சாபல்யமோக்ஷங்கைக் கண்டோமடி
ஸ்ரீபாதத்தைத்தலைச்சூடிநின்று திருச்
செந்துழாயைக்கையிற் கொண்டோமடி. 59

மூன்று குணமுள்ள முத்தனடி ரங்கன்
மூன்றுதொழிலுடை யத்தனடி
மூன்றுருவாகிய நித்தனடி யானை
மூலமெனவோடுங் கத்தனடி. 60

நேசனடி சர்வேசனடி யருள்
நேயனடி மணிமாயனடி
பாசனடி செகதீசனடி ஐய்யன்
பள்ளிகொள்ளும் பரந்தாமனடி. 61

அண்டமளந்தப் பொற்றாளனடி எங்கள்
அழகிய மணவாளனடி
தண்டுளபமாலைத்தோளனடி செந்
தாமரைவல்லிக்கே யாளனடி. 62

காமமகற்றியத்தூயனடி செங்
கமலநாயகி நேயனடி
மாமனைக்கொன்ற நம்மாயனடி பெரும்
மண்டலமுண்ட செவ்வாயனடி. 63

ஆலிலைமேற்றுயில் லோலனடி அயன்
ஆலமுண்டவர்க்குஞ் சீலனடி
காவிமகிழ்கானலோலனடி எங்கள்
கன்னியசோதைக்குப் பாலனடி. 64

தெய்வப்புள்ளேறி வருவாண்டி தொழும்
தேவர்க்கருளைத் தருவாண்டி
பொய்யின் றஞானமும் பொல்லாவொழுக்கமும்
போக்குமடி யருளாக்குமடி. 65

உபயகாவேரிவாசனடி ரங்கன்
உம்பர்முனிவர் உபாசனடி
அபயவத்தமளித்தானடி தேவ
ராஜியருள்ளங் களித்திடவே 66

பெரியாழ்வார் போற்றிடும் பெம்மானடிசிறு
பிள்ளைமுன்னேநின்ற அம்மானடி
கருமங்களைந்திடும் எம்மானடி நீங்கள்
கைகொட்டிப்பல்லாண்டு பாடுங்கடி... 67

பாலும் பழங்களுந் தேனுமுண்டு நெய்
பாகும்பருப்புங் கற்கண்டுங் கொண்டு
காலத்துக்கோர்பிரசாதமுண்டு அந்தக்
கணக்கறிந்ததைச் சொல்லுங்கடி. 68

பொங்கல் புளியோரைத் தயிரன்னம் வெகு
போக்கியமானவெண் தோசைடி
எங்குங்கிடைக்காத சர்க்கரைபொங்கலும்
ரங்கனுக்கேர்வையாமென்று சொல்லி. 69

துங்கநவமணிகளிழைத்துக் கோடிச்
சூரியப்பிரபைகள் போல்தழைத்து
எங்குங்கதிர்வீசும் ரங்கவிமானம்
இங்கேதோற்றுது பாருங்கடி. 70

ஆணிப்பவழத்தால் காலிருத்தியதில்
ஆயிரத்தெட்டுபொன் மாற்றொளிரும்
மாணிக்கமாமணிகளிலங்கும் இந்த
மணிக்கதவையும் பாருங்கடி. 71

பொய்கைபூதன்பேயார் சந்நிதியாம் வையம்
போற்றும்பரமபத வாசல்
ஐயன்ஸ்ரீராமனை வைகுந்தநாதனை
ஆழ்வாராரியர்கள் சேவையிங்கே. 72

சந்திரத்தீர்த்தம் தனில்படர்ந்தோம் நல்ல
சாதுக்கள் சங்கந்தனைத் தொடர்ந்தோம்
செந்திருவல்லி யரங்கநாயகியின்
சேவடி சேவிப்போம் வாருங்கடி. 73

அம்பொன்னரங்கனை யாழிப்படையானை
ஆனந்தமாகவே சேவைசெய்தோம்
நம்புமடியார்கள் துன்பமகற்றிடும்
நாயகிசந்நிதி போற்றிடுவோம். 74

கண்ணினாற்பார்க்கவே கூசுதடி பச்சைக்
கற்பூரவாசங்கள் வீசுதடி
கண்ணிடைவாழுங் கருமணியாகிய
கமலநாயகி சந்நிதியில். 75

செந்தாமரையிலுறைந்தாளடி இந்த
சீரங்கந்தன்னி லமர்ந்தாளடி
பந்தார்பவங்கள் வெந்தோய்ந்திடவே
பணிந்துக் கொம்மியடியுங்கடி. 76

கமலமுகமுங் கமலவிழியுங்
கமலகரமுங் கண்டுகொண்டோம்
அமலனாதிப்பிரானக மோங்கிடும்
அரங்கநாயகி சேவையடி. 77

மோகனமுத்துமணிவடமும் அதின்
முன்னேவயிர பதக்கங்களும்
நாகரத்தினமணிமுடி சூட்டியும்
நாயகிக்கேர்வையாமென்று சொல்லி 78

அத்தியூரினுட் பிறந்தாளடி யரன்
அத்தியைத்தீர்க்கச் சிறந்தாளடி
அத்திக்குமுத்திநத்திக் கொடுத்திட்ட
அத்தனூரத்திலுறைந்தாளடி. 79

கலைமடந்தைக்கும் மலைமடந்தைக்கும்
கானக்குறவள்ளி நாயகிக்கும்
தலைமடந்தையாம்மலர் மடந்தையைத்
தாழ்ந்துவலமாய் வாருங்கடி. 80

ராவணன்கும்பகர்ணன் முதல்வாவியராம்
ராக்கதப்பூண்டையும் வேரறுத்து
தேவர்மகிழ்ந்திடத் தென்னரங்கம்வந்த
தேவியின்சேவை யென்சொல்வேனடி 81

காகத்தைக்கண்ணினல் பார்த்தாளடிநம்
காகுத்தன்கோபத்தைத் தீர்த்தாளடி
பாகசாதனுைத் தேவர்பணிந்திடும்
பங்கசலோசனன் பாவையடி 82

சந்திரதீர்த்தம் வில்வதீர்த்தம்சிவ
சம்புதவஞ்செய்யும் சம்புதீர்த்தம்
இந்திரன்மந்திரம் சொல்லித்தவம்செய்யும்
இந்தவஸ்வதீர்த்தம் பாருங்கடி. 83

புன்னகத்தீர்த்தம்வகுள தீர்த்தம்பவம்
போக்கும்பலாசு தீர்த்தமடி
முன்னகவொளிருங் கடம்பதீர்த்தத்தில்
மூழ்கியம்பா தீர்த்தங்கண்டு 84

நவதீர்த்தத்திலும் நீராடிரங்க
நாயகாவென்றுமே சொல்லுங்கடி
பவசாகரக்கடல் கடந்திடவே
பாங்கானவோடம தாகுமடி. 85

சென்மசாபல்யம தாகுமடிமுன்
செய்தவினையெல்லாம் போகுமடி
கன்மங்களைந்திட வெட்டெழுத்தையோதும்
காலக்ஷேபசபை காணுங்கடி. 86

காலக்ஷேபசபை கண்டோமடிகொடுங்
காலன்வாரமலே நின்றோமடி
சீலமுடனேகம் நாதமுனிவரர்
செய்தகாலக்ஷேப கூடமடி. 87

சாதிசழக்குகளை விடுத்தோம்நல்ல
சாதுக்கள்கோஷ்டி தனையடுத்தோம்
சோதிசொரூபத்தைக் கண்டுகொண்டோம்சேஷ
சுந்திர ரஞ்சித பஞ்சணைமேல். 88

மார்கழிமாதம்மக நாளசம்—இங்கே
மாளாதசேதனக் கூட்டங்களாம்
பார்புகழ் ஏகாதசிதனிலேவந்து
பாவந்தொலைக்கிறார் பாருங்கடி. 89

கொட்டகைஉற்சவம் பாருங்கடி—இந்தக்
கோயிலுக்கேபுகழ் கூறுங்கடி
சிட்டாதிதேவரிஷி மகிழ்ந்திடும்
தென்னரங்கன் சேவைசெய்யுங்கடி. 90

வையாளிகடையு மொய்யாரக்கொண்டையும்
மெய்யாகவே சிறுபையனைப்போல்
ஒய்யாரமாகவே ஐயன் வருகிற
உல்லாசசேவை யென்சொல்வேனடி. 91

கோடிசென்மங்க ளெடுத்தாலும்—வெகு
கோயில்களோடி துதித்தாலும்
நாடியமுத்தி கிடைக்காதென்றுமே
நாதற்குசிவன் சொன்னதடி. 92

ஊரெங்கும்பார்த்தாலும் ஸ்ரீரங்கத்தைப்போல
ஓரங்கமுண்டோடி யொண்டொடியே
ஸ்ரீரங்கராஜனை ரெங்கநாயகியை
செம்பொன்விமானத்திற் கண்டோமடி. 93

இந்திரனும் விதிசந்திரனும்—ரிஷி
இந்திரனுஞ் சோமசூரியனும்
தந்திமுகனுடன் கந்தனுஞ்சந்ததம்
வந்தனஞ்செய்திடும் ரெங்கமடி. 94

பூலோகவைகுந்தம் ரெங்கமடி—இதைப்
போலுண்டோ பூமியிலெங்குமடி
சாலோகசாமீப சாரூபசாயுச்சிய
சகலபதமுஞ் சாருமடி. 95

ஸ்ரீரங்கம்பாராத கண்களடி—கெட்ட
சீயும்நீருமுள்ள புண்களடி
சாரங்கம்வாள்கதை வில்லுடன்நேமிக்கு
சந்ததம்பல்லாண்டு பாடுங்கடி. 96

சீராரரங்கஞ்சீ மூட்டந்திருமலை
செப்புஞ்சாளக்கிராமம் புஷ்கரமே
ஏராார்நைமிசாரண்யந் தோதாத்திரி
ஏற்றவதரியும் போற்றிடுவோம். 97

திருக்குருகைக்கோன் தென்மறைக்கங்கமாயத்
திருமொழி யெழுகூற்றிருக்கை
இருமடலிரு தாண்டகம்பாடிய
வெங்கட்கலியனைப் போற்றுங்கடி. 98

கள்ளசமணரும் சைவரும் புத்தரும்
காட்டும்பொய் மதக்குறும்பறுத்த
வள்ளலாம் காந்திமதிசுதனைப்போற்றி
வாயாரப்பல்லாண்டு பாடுங்கடி. 99

வேகமுடன் செல்லுங்காவிரியாற்றிடை
வேதமொழியின்னும் பாட்டெழுதி
போகவிட்டக்கனக வதியாரருள்
புத்திரரத்தின மாமணியாம். 100

காவிரிமுன்கவி சென்றதடி—பொல்லாக
கள்ளச்சமணரை வென்றதடி
மேவிகற்காணத்தில் வைத்தாட்டிநம்
வித்தைதவிசிஷ்டாத்விதம் நாட்டி 101

பிள்ளைலோகாரியர் நம்பிள்ளை நஞ்சீயர்
போற்றும்மணவாள மாமுனிகள்
வள்ளல்வானமாமலை சீயர்சேவடி
வாழ்த்திடுவோந்தலை தாழ்த்திடுவோம் 102

தென்னாரியர் சம்பிரதாயமடி—நம்
தென்னரங்கன்மகிழ் சீரியராம்
தென்னாரியராந் திருவாய்மொழிப்பிள்ளை
திருவடிக்கேகை கூப்புங்கடி. 103

பிறந்திறக்குந்துயர் விட்டொழிந்தோம்—எங்கள்
பெம்மானருளில் விழுந்தெழுந்தோம்
மறந்தும்புறந்தொழா மங்கையரேநீங்கள்
மதிளரங்கேசனைப் பாடுங்கடி. 104

பூர்வாரியர்பெயர் பூண்டாலும்—பாதப்
பொன்மலர்புண்டரம் பூண்டிலரேல்
ஆர்வம் முழங்கிடத்திருச்சின்னமூதும்
அரியமரியாதை யில்லையடி. 105

எல்லையில்லாயுகம் செய்தவத்தால்—எம்தென்
ஆரியர் பாதமடைந்தோமென்று
முல்லைமுகையின் நகைதுலங்கநீவீர்
முழக்கிக் கொம்மியடியுங்கடி. 106

கோமறையுச்சியில் நின்றேநடித்திடும்
கோவிந்தன்பாலனாய் கோஷ்டியிலே
மாமுனிகள்சாற்றும் மாறன்மறைகேட்டு
மாளரப்பாவசங் கொண்டானடி. 102

மாளாப்பரவசங்கொண்டு நின்று—இந்த
மண்டலமுண்ட செவ்வாய்திறந்து
நீளமாங்கோஷ்டியில் ஸ்ரீசைலேசமென்று
நேமமாய்ச்சொன்ன தனியனடி. 108

ஸ்ரீசைலேசந்தன்னைச் செப்புங்கடி—செய்யும்
தீவினையினின்று தப்பிடுவோம்
ஓசையுடனே மணவாளமாமுனி
ஓங்கக் கொம்பியடியுங்கடி. 109

அட்டகஜமாம் நம்மாரியர்களேத்தும்
ஐய்யன்வரயோகி வந்திலனேல்
எட்டுமிரண்டு மறிவாரோவென்று
இசைத்துக் கொம்மியடியுங்கடி. 110

மணவாளமாமுனிகள் தனியன்சொல்லி
மகிழ்ந்துநிற்காத மானிடங்கள்
குணமுடன்கற்றதும் கேட்டதும்பாழென்று
கோதையரேகையைக் கொட்டுங்கடி. 111

மாற்றுயர்செம்பொன் மணவாளமாமுனி
மாநிலத்தன்னி லுதித்திலனேல்
ஆற்றிற்கரைத்தபுளி யல்லவோதமிழ்
ஆரணமென்றே கைகொட்டுங்கடி. 112

ராமாநுஜன்பொன்னடியாம் நம்சுவாமியை
நாடுமடியா ரவரடியார்
நேமமிகுத்த வவரடியாரடி
நெஞ்சிற்பதித்தவ ரடிபணிவோம். 113

கண்ணாரரங்கத்தைக் கண்டோமடி—தேவ
கந்தருவருங்கந்தன் தந்தையரும்
பண்ணாரநாதனு மயனும்போற்றும்
பரமபதத்தை கைக்கொண்டோமடி. 114

கந்தாயரங்கன் கலியன்மழிசைமன்
நாதன்விஷ்ணு சித்தன்சேனையர்கோன்
கந்தாடையண்ணன் மலைசியர்மாமுனிக்
காரிமாறன்பெற்றக் கண்மணிக்கும். 115

அய்யன்முனிவனை வாகனமாய்க்கொண்டு
அந்தமிழ்பாட்டினால் கண்டடைந்த
மெய்யன்பாணாழ்வாரை யுள்ளத்திருத்திடும்
வேதாந்ததேசிகன் சீர்த்திசொல்லி. 116

சித்தியும்பத்தியுங் கூடுமடி—யட்ட
செல்வங்கள்வந்து கொண்டாடுமடி
பத்தியுடனேநம்மாழ்வா ராரியர்க்கே
பரிந்துபல்லாண்டு பாடுங்கடி. 117

பல்லாண்டுபல்லாண்டு பாடுங்கடி—பஞ்ச
பாபங்கள்பஞ்சாய்ப் பறக்குமடி
மல்லாண்டதிண்டோள் மணிவண்ணனாகிய
மாதவன்பாத மடைவோமடி. 118

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர்பாதம்
அனவாதமுடிசூடி நின்று
வாழ்விக்கும்வைகுந்த பரவாசுதேவன்மேல்
வாழிபாடுவோம் வாருங்கடி. 119

சீரெங்கக்கொம்மிதனைப்படித்தோர் கேட்டோர்
சிந்தையில்வைத்து நினைந்திதுப்போர்
பாரெங்கும்போற்ற வரங்கனருள்பெற்றுப்
பல்லாண்டுபாடி மகிழ்ந்திடுவார். 120

## வாழித் திருநாமம்

பங்கயத்தொளிர் செல்வியும் வாழியே
பார்மகள் கோதைநாதனும் வாழியே
சங்குசக்கரந்தண்டு வாள் வாழியே
சாமகானநித்தர் முத்தர் வாழியே
பொங்குமுள்ளப் பதின்மரும் வாழியே
பொன்னடியாம் நம்மாரியர் வாழியே
எங்கும்போற்றும் எதிபதி வாழியே
என்றும் வைணவக்கோட்டியும் வாழியே

வாழி வாழி வானமாமலைப்பரன்
வாழி வாழி நம்ஸ்ரீவரமங்கையும்
வாழி வாழி சடகோபவாரியன்
வாழி வாழி யவனடியார்களே.

---

ஸ்ரீவானமாமலை ஸ்ரீமத் சடகோப ராமாநுஜதேசிகன்
பொன்னடிகளே சரணம்.

ஸ்ரீமதச்சுத சடகோப எதிராஜ வரவர நிஜக்குருப்யோ நம:
அழகிய மணவாளன் திருவடிகளே சரணம்.

**கோயிற்கொம்மி என்னும் ஸ்ரீரங்கக் கொம்மி**

முற்றிற்று.

---

இங்ஙனம் :

ம. வே. வாசுதேவ ராமாநுஜ தாசன்.

தில்லைத் திருச்சித்திரகூடம்,
1—9—35.

---

"அமிர்த குணபோதினி" பிரஸ், 158-எ, பிராட்வே, சென்னை.